Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Dail
மலர் 8 (11 2 66) இதழ்

விசுவாவசு தை 29 ஷவ்வால் பிறை 19 வெள்ளிக்கிழமை




### நிருபர்களின் சுறுசுறுப்பு

இரத்மலானை, வியா.

ஜெனரல் நீவின்னை ஏற்றி வந்த விமானம் இன்று இரத்மலானை விமான நிலையத்தை அடைந்தபோது, விமானத்தில் இருந்தவர்கள் இறங்குவதற்குரிய 'விமான இறங்குபடிகள்' இணைக்கப்படுவதற்கு முன்பாகவே பர்மிய விமானத்திலிருந்த நிருபர்கள் இருவர் கீழே பாய்ந்திறங்கிப் படம் பிடிக்கத் தொடங்கிவிட்டனர்.

# ஜெனரல் நீ வினுக்கு உற்சாகமான வரவேற்பு

## பிரதமருடன் இன்று பேச்சு நடத்துகிறார்

இரத்மலானை, வியாழன்

இன்று நண்பகல் இலங்கை வந்துசேர்ந்த பர்மிய ராஜாங்கத் தலைவர் ஜெனரல் நீவினுக்கு, இரத்மலானை விமானநிலையத்தில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜெனரல் நீவின் கோஷ்டியினரை ஏற்றிவந்த நான்கு என்ஜின் பூட்டப்பட்ட விசேஷ விமானம் இன்று நண்பகல் சரியாக 12-28க்கு இரத்மலானை விமானநிலையம் வந்தடைந்தது. இந்த விசேஷ விமானத்தை இலங்கை விமானப்படையைச் சேர்ந்த இரண்டு விமானங்கள் துணைகொண்டு அழைத்துவந்தன.

ஜெனரல் நீவின், விமானத்திலிருந்து இறங்கி வெளியே வந்ததும் அவரைக் கௌரவிக்குமுகமாகப் பீரங்கிகள் இருபத்தியொரு தடவைகள் முழங்கின. இதனைத் தொடர்ந்து முதலில் பர்மிய தேசியகீதமும், பின்னர் இலங்கைத் தேசியகீதமும் ஒலிக்கப்பட்டது. ஜெனரல் நீவின் பர்மிய புரட்சித் தலைவராக இருந்த பொழுதிலும் அவர் இராணுவ உடைகளை அணியாது சாதாரண உடைகளையே அணிந்திருந்தார்.

### ஜன சமுத்திரம்

ஜெனரல் நீவினை வரவேற்பதற்காக மக்கள் சுடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் காலிமுகவீதியிலும் விமானநிலையத்தின் சுற்றுப்புறங்களிலும் குழுமியிருந்தனர். ஏராளமானவர்கள் இன்று காலையிலிருந்துஇங்கு கூட ஆரம்பித்துவிட்டனர்.

### கரம்கூப்பி வணக்கம்

விமானத்திலிருந்து நீவின் இலங்கைப் போக்குவரத்து மந்திரி திரு. ஹுலுகல்லே அழைத்து வரப்பட்டார். விமானத்திலிருந்துவெளியே அவர் வந்ததும் அங்கு குழுமியிருந்த மக்களுக்கும் இலங்கைத்தலைவர்களுக்கும் இருகரம்கூப்பி வணக்கம் செலுத்தினர்.

### அறிமுகம்

இதன்பின்னர் ஜெனரல் நீவின் அங்கு நின்றவர்களுக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார். முதலில் அவர் மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவுடன் கைகுலுக்கினர். பின்னர் பிரதமர் டட்லி சேனநாயக்

(6-ம் பக்கம் பார்க்க)

## காடைத்தனத்தில் ஈடுபட்ட பலர் கைதாகினர்

### யாழ்ப்பாண பொலிசார் தீவிரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற ஒரு மாத காலத்துக்குள் யாழ்ப்பாணத்தில் காடைத்தனத்தில் ஈடுபட்டதாக 50 பேர்களையும். 15ஐ.ஆர்.சி.களையும். பள்ளிமாணவிகளுடன் சேட்டைக்குப் போனதாகக் கூறப்படும் சில வாலிபர்களையும் பொலிசார் கைது செய்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் 'பிற்பாக்கட்' அடித்ததாகவும், வீண் வம்புக்குப் போனதாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. பாடசாலைக்குச் செல்லும் மாணவிகளை பின் தொடர்ந்து. அவர்களுடன் சேட்டைவிடும் வாலிபர்களை பொலிசார்மிகவும் எச்சரிக்கையாகக் கண்காணித்ததைத் தொடர்ந்தே மேற்படி வாலிபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்ரீண்டன் திரு. இடமல்கொட பொலிஸ் குற்றப்பிரிவுப் பொறுப்பாளர் இன்ஸ்பெக்டர் எம். ஆர் சௌந்தரநாயகம், இன்ஸ்பெக்டர் திரு. வீ.எஸ். சொலமன் ஆகியோரின் உதவியுடன் மேற்படி நபர்களை கைது செய்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் நகரத்தில் இப்படியானவர்களைக் கண்காணிப்பதில் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள் என்றும் இரவு நேரத்தில் சிவில் உடுப்பில் பொலிஸார் ரோந்து சுற்றித் திரிவதாகவும் கூறப்பட்டது. (ந. நி.)

சுகததாசா கொலைமுயற்சி

## சந்தேகநபர் மஜிஸ்ரேட் முன் ஆஜர்

### சமசமாஜி ஒருவரும் கைது

### பொலிசார் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

கொழும்பு, வியாழன்

நேற்றைய தினம் தேசிய சேவை மந்திரி திரு. சுகததாஸாவை கொலை செய்ய சதித் திட்டமொன்று ஏற்பாடாகி வந்தது சம்பந்தமாக நேற்று இரகசிய பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவர் இன்று மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் தொடர்ந்துகைது செய்யப்பட்ட மற்ற இருவரும் நாளைய தினம் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்படுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சதியில் சம்பந்தப்பட்டவராகக் கருதப்படும் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் விசாரணைக்காக பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டிப்பதாகவும் அறியப்படுகிறது.

பொலிஸ் விசாரணை முடியும் வரை சந்தேகநபர்களை காவலில் வைத்திருக்கும்படியும் பொலிசார் மாஜிஸ்டிரேட்டைக் கேட்டுக்கொள்வார்களெனவும் தெரிய வருகிறது

மேற்படி சம்பவம் சம்பந்தமாக மேலும் பல தகவல்கள் இரகசியப்பொலிஸாருக்குக் கிடைத்திருப்பதாகவும் அறியவருகிறது. இன்று

(6-ம் பக்கம் பார்க்க)

## சிறிமா, என். எம், கெனமன் இல்லை

கொழும்பு, வியா.

இன்று கொழும்பு வந்திறங்கிய பர்மியத் தலைவர் ஜெனரல் நீவின்னுக்கு விமான நிலையத்தில் இரு ராணுவ வீரர்களுக்கு மத்தியில் நின்றிருந்த குட்டி யானை, துதிக்கையைத் தூக்கி வணக்கம் செலுத்தியது. நீவின் புன்னகையுடன் அதை ஏற்றுக்கொண்ட போதிலும் அதன் அருகில் செல்லவில்லை. ராணுவத் தலைவர் உடுகமவிடம் அவர் யானையைப்பற்றி விசாரித்தார். ராணுவக் கட்டளைக்கு அடிபணிந்து அது நல்ல முறையில் நடப்பதாக உடுகம பதிலளித்தார்.

ஸ்ரீமதி சிறிமாவோ பண்டாரநாயகா, டாக்டர் என். எம். பெரேரா, திரு. மைத்திபால சேனநாயகா, திரு. பீட்டர் கெனமன் ஆகியோர் விமான நிலையத்துக்கு வரவில்லை. மந்திரி திரு. செல்வம் வந்திருந்தார்.

வடபகுதி

## நாற்பது ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்து

### கல்விமந்திரி நியமித்த கமிட்டி முடிவு

கொழும்பு, வியா.

வட பகுதியில் 324 தமிழாசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டது சம்பந்தமாக ஆராய்வதற்காக கல்வி மந்திரி திரு ஐ எம். ஆர். ஏ. இரியகொல்லையினால் நியமிக்கப்பட்ட கமிட்டி தனது அலுவல்களை முடித்துக் கொண்டுள்ளது.

தற்போது செய்யப்பட்ட இடமாற்றங்களில் 40 மட்டும் ரத்துச் செய்யப்பட வேண்டுமெனவும் அது சிபார்சு செய்துள்ளது. இக்கமிட்டியில் டாக்டர் ஆனந்த குருகே, உயர்தர உதவி காரியதரிசிகள், கல்வி அதிகாரி திருமதி ஆர் நவரத்தினம், திரு. பி. மாணிக்கவாசகர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்த இடமாற்றத் திட்டத்தினால் வடபகுதியில் தேவைக்கும் அதிகமாக ஆசிரியர்கள் இருந்து வருகிறார்களென்றும், ஆகையால் இதுவரை காலமும் வெளி மாகாணங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு வட பகுதியிலுள்ள பாடசாலைகளில் இடமளிக்க வேண்டும் என்பது குறித்தும் கமிட்டியில் ஆராயப்பட்டது

மேற்படி இடமாற்ற திட்டத்தில் ஆசிரியர்களிடையே பலத்த அதிருப்தி இருந்ததைத் தொடர்ந்தே கல்வி மந்திரி இதுபற்றி விசாரிப்பதற்கு இந்தக்கமிட்டியை நியமித்தார்.

தமிழரசுக் கட்சியினரும், தமிழ்காங்கிரஸ் கட்சியினரும் இந்த இடமாற்றம் குறி

(6-ம் பக்கம் பார்க்க)

அச்சிடும் தாள்கள் முதலியன, அப்பியாசப் புஸ்தகங்கள், மலிபன் விஸ்கோத்துகள், தங்காறு தேயிலை, மற்றும் ஏக வினியோகப் பொருட்கள் எமது மொத்த விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
(வரையறுக்கப்பட்டது)
மொத்த விற்பனை நிலையம்,
287, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
1594

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இறைவன் அருள் என்பது கம்பிக்குள் மின்சக்தி ஓடுவது போல அது எப்போதும் எங்கும் பாய்ந்து கொண்டே இருக்கிறது. அவரது நாமமாகிய 'ஸ்விட்ச்' மூலம் உங்களை அந்தக் கம்பியுடன் இணைத்ததும் திருவருளும், உங்களுக்குச் சுரக்கின்றது.

— சத்யசாய்பாபா

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily [illegible]
Telegrams: "EELANADU" Office Phone: [illegible]

[illegible] விசுவாவசு ஆண்டு தை 29 உ (11-2-66)

# பார்லிமெண்ட் சபாநாயகர்

இலங்கை ஜனப்பிரதிநிதிகள் சபைத்தலைவரான சேர் அல்பர்ட் பீரிஸ்மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 57 அதிகப்படி வாக்குகளால் தோல்வியடைந்தது சரியானதும் எதிர்பார்க்கப் பட்டதுமாகும். அன்று தமிழ்மொழி உபயோக விதிகளைப்பற்றி விவாதம் நடந்தபோது சபைகாலரியில் பொதுமக்கள் அனுமதிக்கப் படவில்லை. அன்று சிறப்பாக பிற்பகல் நடவடிக்கைகளை நேரில் கவனித்தவர்கள், சபைத்தலைவர் எவ்வளவு சங்கடமான ஒரு நிலைமையை எவ்வளவு திறமையாகவும் வெற்றிகரமாகவும் சமாளித்தார் என்பதை உணர்வர். அவர் அவ்வளவு உறுதியும் கண்டிப்பும் காட்டியிராவிடில், அன்று அந்த விதிகள் நிறைவேறியிருக்குமோ என்பதே சந்தேகம்.

தீவிர கருத்து வேற்றுமைக்கும் உணர்ச்சி வேகத்துக்கும் உட்பட்ட அந்த விஷயத்தைப்பற்றி நன்கு விவாதிக்க வேண்டியதே. அரசாங்கம் இதற்கு நான்கு நாட்கள் அனுமதித்தது. இதைக் குறைவென்று சொல்ல முடியாது. என்ருலும் இவ்விஷயம்பற்றி முன்கூட்டியே தக்க ஒழுங்கு முறைகளைச் செய்ய சபை விகிதர், எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்திருந்தார். அத்தலைவர்கள் இம்முயற்சியில் ஒத்துழைத்திருந்தால் இவ்வித நிலைமையே ஏற்பட்டிராது. துரதிருஷ்டவசமாக அவர்கள் ஒத்துழைக்கவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு மூன்று காரணங்கள் சொல்லப்பட்டன. அதாவது, (1) சபையிலே 'அந்நியர்களை' அனுமதித்து சபையின் கண்யத்தைக் காக்கத் தவறியது (2) சபையின் அனுமதியைப் பெருமலேயே நிரந்தர விதிகளுக்கு மாருக, இடைவேளையில் ஒரு மணி நேரத்தை விவாதத்துக்கு அளித்தது. (3) எதிர்க்கட்சியினருக்குப் போதிய அவகாசம் அளிக்காமல், விவாத முடிவு நேரத்தை முன்கூட்டியே தலைவர் நிர்ணயித்தது. இம்மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சரியான் பதில் அளித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பிரதிநிதி எடுத்துக் கூறியது போல், சபாநாயகர் ஏன் அவ்வித அசாதாரண நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டதென்றதைப் பற்றி இந்தப் பிரேரணை கொண்டுவந்தவர்கள் ஒரு வார்த்தையும் கூறவில்லை. பிரதமரைப் பேசுமாறு தலைவர் கேட்டதும் பிரதமர் எழுந்து நிற்க, எதிர்க்கட்சி மெம்பர் ஹுபரதுவா பிரதிநிதியும் எழுந்து நின்று மளமளவென்று பேசினர். அவரைத் தயவுசெய்து உட்காருமாறு சபாநாயகரே பல்முறையும் கேட்டும் அவர் கேட்காமல் பிடிவாதமாகப் பேசினர். பார்லிமெண்ட் ஒழுங்கு முறையையும் கண்யத்தையும் காக்க எதிர்க்கட்சியினர் உண்மையில் விரும்பி இருந்தால், அப்பேச்சாளரைத் தடுத்து, பின்னர் அவ்வித அசம்பாவிதங்கள் ஏற்படாமல் செய்திருக்கலாம். அவர் சுயேச்சையான மெம்பர் தான். என்ருலும் அவரது கூடாத செயலைக் கண்டித்து தலைவருடன் எதிர்க்கட்சியினர் அன்று ஒத்துழைத்திருக்கவேண்டியதே முறை. தாங்கள் செய்த தவறுக்காகத் தலைவரைக் கண்டிப்பது விபரீதமே.

அம்முக்கிய விஷயம் பற்றிய விவாதத்துக்கு அதிகநேரம் அளித்து எதிர்க்கட்சியினருக்கு உதவவே, சபாநாயகர் இடைவேளையில் ஒரு மணி நேரத்தைக் குறைத்தார். இதற்காகத் தலைவருக்கு எதிர்க்கட்சியினர், நன்றி தெரிவிக்க வேண்டும். அந்த நேரத்தையும் பூரணமாகப் பயன் படுத்திக்கொண்டு தலைவரையே இதற்காகக் குறைகூறுவது எவ்விதத்தும் நேர்மையாகாது. அன்று ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணிக்கு அமுலுக்கு வந்ததால், சபையை அதற்குள் கலைக்கவேண்டிய விசேஷ பொறுப்பு தலைவருக்கு உண்டு. அதனுலேயே 4-30 மணிக்கு விவாதம் முடியுமென்று தலைவர் முன்கூட்டியே அறிவித்தார். இதற்காகத் தலைவரை எப்படிக் குறைகூற முடியும்!

சபை மெம்பர் எவரையும் வெளியேற்றுவதாயின், தலைவர் 5 நிமிஷம் சபையைக் கலைத்து வெளியேறியபின்பே பொலிசார் புகுந்து அம்மெம்பரை வெளியேற்றுவது சம்பிரதாயம். ஆனுல் அன்று இரு மெம்பர்கள் வேண்டுமென்றே 'கல்லடி மங்கன்' வேலைசெய்தனர். அடுத்த தேர்தலுக்கு விளம்பரம் செய்துகொள்வது போல் அவர்கள் நடத்தை இருந்தது. எதிர்க்கட்சியில் பலர் இவ்விரு மெம்பர்களின் போக்கை விரும்பவில்லை என்பது உண்மையே என்ருலும் சபையை அடிக்கடி கலைத்திருப்பின், அன்று தீர்மானம் நிறைவேறியிருக்க முடியாது. தலைவரின் போக்கைக் கண்டித்தவர்கள், அந்த இரு மெம்பர்களின் நடத்தையையும் ஏன் கண்டிக்கவில்லை? மேலும் யாழ்ப்பாண மெம்பர் எடுத்துக்காட்டியது போல், சபை எல்லைக்குள், கடமை பார்க்கும் பொலிசார், சபாநாயகரின் கட்டளைக்கு உட்பட்ட ஊழியர்களேயன்றி அந்நியரல்ல. தலைவரின் அன்றைய நடத்தையை எவ்விதத்தும் தவறு என்று சொல்வதற்கில்லை. உலகிலே பார்லிமெண்ட் ஜனநாயக முறை இலங்கையில் வெற்றிபெற வேண்டுமென்று விரும்புபவர்கள், தலைவரின் நடத்தையைக் கண்டிப்பதற்குப்பதில், அவருடன் பூரணமாக ஒத்துழைத்திருக்கவேண்டும். அன்றைய வருந்தத்தக்க 'சம்பவங்கள் இனி அவ்விதம் நடைபெறமாட்டா [illegible] யாக இருக்குமென்றே நம்புவோம்.

சுவிட்சர்லாந்தின் அரசியல் அமைப்பு

# சுவிட்சர்லாந்தின் நிர்வாக முறை விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

சமஷ்டிச் சட்ட திட்டங்களில் பலவும் இரு சட்டசபைகளிலும் தனித்தனியேவிவாதித்து முடிவு செய்யப்படுகின்றன. இருசபைகளும் அங்கீகரித்தால்தான் அது சட்டமாக நடைமுறைக்கு வரும். கருத்து வேற்றுமை ஏற்பட்டால் இருசபைகளும் தெரிவுசெய்யும் ஒரு மத்தியஸ்தக்குழுவின் ஆலோசனைக்கு விடப்படும். அந்த மத்தியஸ்த குழுவும் ஒருசமரச முடிவுக்கு வரமுடியாது போனுல் அந்த மசோதா கைவிடப்படும். ஆனுல் நடைமுறையில் இவ்விதநிலை ஏற்படுவதில்லை. ஏதாவது சமரச உடன்பாடு ஏற்பட்டு விடும்.

இருசபைகளின் அதிகாரமும் கடமையும்சமமானது. சட்டசபையின் ஆயுள்முடிந்தாலும் எஞ்சியுள்ள விஷயங்கள் அத்துடன் காலாவதியாவதில்லை. புதிய சபை அவ்விஷயங்களை எடுத்து விவாதித்து நிறைவேற்றும். சபைப்பிரதிநிதிகளுக்குப்பிரயாணப்படிச்செலவும் நாள் ஒன்றுக்கு ஒரு சிறிய சம்பளமும் கொடுக்கப்படவிருக்கிறது. இருசபைகளிலும் கான்டன் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள், யூனியனின் காரியதரிசிகள், டாக்டர்கள், ஆசிரியர்கள், நியாய துரந்தரர்கள், தொழிலதிபர்கள், விவசாயிகள், பத்திரிகாசிரியர்கள் முதலியோர் அங்கம் வகிக்கின்றனர்.

சிலசமயம் இருசபைகளும் சேர்ந்து கூடுவதுமுண்டு. சமஷ்டிசபை, சமஷ்டி உயர் நீதிமன்றம். சமஷ்டி இன்சியூரன்ஸ், நீதிமன்றம் இவற்றுக்குப் பிரதிநிதிகளையும், தலைவர், உபதலைவர்களையும் இந்தக் கூட்டுச்சபை தெரிவுசெய்யும். பாரதூரமான அரசியற் குற்றவாளிகளுக்கு மன்னிப்பு அளிக்கும் அதிகாரமும் இக்கூட்டுச் சபைக்கு உண்டு. சாதாரண குற்றங்களை மன்னிக்கும் அதிகாரம் கான்டன் பெரிய சபைக்கு இருக்கின்றது.

தேசியசபையின் தலைவரே இந்த ஐக்த ஐக்கிய சமஷ்டி சபைக்கூட்டத்துக்குத் தலைமைவகித்து நடத்துவார்.

தேசிய கவுன்ஸில் அமைப்பை இனிக் கவனிப்போம். தேசிய கவுன்ஸிலுக்குப் பிரதிநிதிகளை வாக்காளர்கள் நேரடியாகத் தெரிவு செய்கிருர்கள். ரகசியமுறையில் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. ஒரு கான்டனே, அல்லது அரைக் கான்டனே ஒரு தேர்தற் தொகுதியாகும். 36 ஆயிரம் வாக்காளர்களுக்குக் குறைந்த கான்டன்களே ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்யும். மற்றையவையெல்லாம் ஜனத்தொகைக்குத்தக்கபடி பல தொகுதிகளாகும்.

1940-ம் வருஷ ஜனக்கணக்கின்படி பெர்ன்தொகுதிக்கு 33 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தது. ராஜாங்கக் கவுன்ஸிலில் பெடரல் (சமஷ்டி) கவுன்ஸிலில், மதபோதகர்கள், சமஷ்டி அதிகாரிகள் முதலியோர் தேசியக்கவுன்ஸிலில் தேர்தலிற் போட்டியிடமுடியாது.

கிடைக்கும் வாக்குகளின் வீதாசாரத்துக்குத் தக்கபடி ஒவ்வொரு கட்சிக்கும் ஸ்தானங்கள் ஒதுக்கப்படும். உதாரணமாக ஒரு கான்டனில் 60 ஆயிரம்வாக்காளர்கள் இருந்து அதில் 'அ' இடாப்புக்கு 36 ஆயிரம் வாக்குகளும், 'ஆ' வுக்கு 12 ஆயிரம்; 'இ' வுக்கு 6 ஆயிரம், 'ஈ' இடாப்புக்கு 5 ஆயிரம், 'உ' வுக்கு ஆயிரம் லாக்குகளும் கிடைப்பின், அந்தக் கான்டனுக்கு உரியஸ்தானங்கள் முறையே 6, 2, 1, 1, 0 என்று ஒவ்வொரு கட்சிக்கும் பங்கீடு செய்யப்படும் ஒவ்வொரு இடாப்பிலும் அதிகமானவாக்குகள் பெற்ற அபேட்சகர்கள் மேற்குறித்த விகிதாசாரப்படி பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுவர். ஒரு வாக்காளர் ஒரு அபேட்சகருக்கே தனக்குரிய வாக்ககளில் 2ஐயும் 'குவியல் முறை'யில் அளித்து அவர் தெரிவுசெய்யப்பட உதவலாம். யாராவது 15 வாக்காளர் சேர்ந்து ஒரு இடாப்பைத் தயாரித்து தேர்தலுக்குச் சில வாரங்களுக்கு முன் அனுப்பலாம் சட்டம் இப்படியிருப்பினும் பொதுவாகக் கட்சிகளே இந்த இடாப்புகளைத் தயாரித்துச் சமர்ப்பிக்கின்றன. ஒரு தேசியக் கவுன்ஸிலர் இறந்தாலோ அல்லது தமது பதவியை ராஜினுமா செய்தாலோ அவர் எந்த இடாப்பைச் சேர்ந்தவரோ அதில் அவருக்கு அடுத்தபடியான வாக்குகளைப் பெற்றவர் இந்த ஸ்தானத்திற்கு அங்கத்தவராவர். இதனுல் இடைத்தேர்தல் நாடவேண்டிய அவசியமில்லை. மிக அபூர்வமாகவே இடைத்தேர்தல்கள் நடைபெறுகின்றன இந்த விகிதாசாரத் தேர்தல் முறையால் பல அரசியல் கருத்துகள்கொண்ட கட்சிகளுக்கும் இடம் கிடைப்பதுடன் தேசியக் கவுன்ஸிலும் மக்களின் பலதரப்பட்ட அபிப்பிராயங்களையும் உண்மையில் பிரதிபலிப்பதாக இருக்கிறது. பொதுவாகத் தனிப்பப்பட்ட ஒரு கட்சிக்கு மேலதிமன பலம் கிடைப்பதில்லை. பல கட்சிகளும் சேர்ந்து கூட்டரசாங்கம் நிறுவி சமரசமாக ஆட்சி நடத்தவேண்டியேற்படுகிறது. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை தேசியக் கவுன்ஸிலுக்குப் பொதுத் தேர்தல் நடைபெறும். அக்டோபர் மாதக் கடைசி ஞாயிறுதான் தேர்தல் தினம். அடுத்த டிசம்பர் ஆரம்பத்தில் புதிய சபை கூடும். தேசிய சபையிலும், ராஜாங்க சபையிலும் ஒவ்வொரு அங்கத்தவரும் தமது தாய்மொழியில் சேரலாம். ஆனுல் டிஸினேப் பகுதிப் பிரதிநிதிகள் தங்கள் தாய்மொழியான இத்தாலிய பாஷையில் பேசாமல் மற்றவர்கள் விளங்கிக் கொள்வதற்காகப் பிரெஞ்சு மொழியில் பேசுகின்றனர். சபை நடவடிக்கைகள் ஒழுங்காகவும் அமைதியாகவும் கண்ணியமாகவும் இருக்கும். நிர்வாகிகளுடன் ஒத்துழைப்பதால் அதிக பலன் கிடைக்கின்றது.

### ராஜாங்க சபை

ராஜாங்க சபைக்கு ஒவ்வொரு கான்டனும் இரு அங்கத்தவர்களையும் ஒவ்வொரு அரைக் கான்டன் ஒரு அங்கத்தவரையும் அனுப்புகின்றது. சமஷ்டி அரசியலை

(6-ம் பக்கம் பார்க்க)

## ஜயசாரன் எழுதுவது

மந்திரி சுகததாசாவைக் கொல்லச் சதி நடந்துள்ளதாக ஒரு செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டேன். பிரதமர், மந்திரிப்பதவி வகிப்பவர்களைக் கண்டு யாரும் பொருமைப்படத் தேவையில்லை. நைஜீரியாவிலே பிரதமர், மந்திரி இவர்களுக்கு ஏற்பட்ட கதியை நினைக்கையில், அப்பதவி வகிப்பவர்களைக் கண்டு நாம் மிக அனுதாபப்பட வேண்டும். எந்தச் சமயத்தில் என்னவோ!

இலங்கையில் அவ்விதம் நேரிடாமல் அரசாங்கம் மட்டுமன்றி எதிர்க்கட்சித் தலைவர்களும் தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றேல் நமக்குக் கிடைத்த சுதந்திரமும், ஜனநாயகமும் பயனின்றி, நாட்டுக்குச் சாபத்தீடாகவும் முடியும்.

ஃ ஃ ஃ

தபால் இலாகாவிலே மொழிபெயர்ப்புக் 'கொலை'யைப்பற்றி ஓரன்பர் நடந்த கதையொன்று சொன்னுர். ஒரு கடிதத்தில் ''புளியமரச் சந்து'' என்று தமிழில் விலாசமிடப்பட்டிருந்ததாம். அதைத் தென்னிலங்கையிலுள்ள ஒரு தபால் காரியாலயத்தில், ''டாமரிண்ட் டிரீ லேன்'' என்று மொழிபெயர்த்து எழுதிவிட்டார்களாம். 'டாமரிண்ட்' என்ருல் புளி 'டிரீ' என்ருல் மரம், 'லேன்' என்ருல் சந்து. ஆகவே அந்த மொழி பெயர்ப்பு தவறு என்று யாரிடம் சொல்ல முடியும்.

என்ருலும் இங்கு அப்படிப்பட்ட ஒரு இடம் இருக்கிறதைக் கண்டு பிடிக்க பத்து நாட்களாயிற்றென்றும் அதன்பிறகே அக்கடிதம் கிடைத்தாகவும் ஓரன்பர் தெரிவிக்கிருர்.

இதைக் கேட்டதும், எனக்கு வேருெரு 'கொலை' ஞாபகம்வந்தது ''உப்புமா ஊசிப் போச்சு'' என்பதை ஒரு பிரகஸ்பதி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தாராம். எப்படித் தெரியுமா? ''சால்ட் பிளவர் நீடில்வென்ட்'' என்று. சால்ட் என்ருல் உப்பு, பிளவர் என்ருல் மாவு, நீடில் என்ருல் ஊசி, வென்ட் என்ருல் போச்சு. தமிழை அரசாங்கத்திலே இவ்விதம் 'முழி பெயர்த்தால்' நிர்வாகம் எப்படி இருக்கும்? பொது மக்கள் கதி என்ன ஆவது? இன்னும் தமிழை, சிங்களத்தில் எப்படி 'முழி பெயர்க்கிருர்களோ'.

ஃ ஃ ஃ

இலங்கையிலே பொதுமக்கள் முக்கியமாக மூன்று மொழி பேசுகிருர்கள். சிங்களம், தமிழ், ஆங்கிலம். பொதுமக்களின் ஊழியர்களான அரசாங்க சிப்பந்திகள், பொதுமக்களுக்கு நல்ல முறையில் ஊதியம் செய்யவேண்டுமானுல், தங்கள் எஜமானர்களாகிய பொதுமக்களின் மூன்று மொழிகளும் ஓரளவாவது தெரிந்திருக்கவேண்டும். அப்படித் தெரிந்திருப்பின், இவ்வித 'முழிபெயர்ப்புக் கொலை'களுக்கு அவசியமே இல்லாதுபோவதுடன், பொதுமககளுக்கும் எவ்வளவோ வசதியாக இருக்கும்.

அரசாங்க ஊழியருக்கு நல்ல சம்பளம் கொடுக்கிறேம். எவ்வளவோ சலுகைகளுமுண்டு. ஆகவே மக்களின் மூன்று மொழிகளும் அவர்களுக்கு ஓரளவாவது தெரிந்திருக்க வேண்டுமென்றும், அப்படித் தெரிந்தவர்களுக்கே இனிவேலை கொடுப்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவியட்னுமில்

# அமெரிக்ககுண்டுவீச்சு அதிகரிப்பு

சைகோன், பெப். 10
மத்திய வடக்குவியட்னு மில் நேற்று அமெரிக்கவிமா னங்கள் குண்டுகள் வீசிய தில் பாலங்கள், சாலைகள் ஆகியவை சேதமுற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ இலக்குகள்மீது அமெரிக்க விமானங்கள் குண்டுகள் வீசியதில் பல நிலைகள் முற்ருக அழிந்து விட்டன என்று அறிவிக்கப் படுகிறது.

வடக்குவியட்னுமில் அமெ ரிக்க விமானங்களின் குண்டு வீச்சுகள் இப்பொழுது அதி கரித்திருக்கின்றன என்றும் இதனுல் பரவலான சேதம் ஏற்பட்டு வருகின்றன என் றும் இங்குள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள்தெரி வித்துள்ளனர்.

தென்வியட் காங்கியர் இருக்கும் பகுதிகளிலும் நேற்று அமெரிக்க விமானங் கள் தாக்குதல்கள் நடத் தின.

## கேவல்சிங்

கராச்சி, பெப். 10
பாகிஸ்தானிலுள்ள இந் திய ஹைகமிஷனர் திரு. கேவல்சிங் நேற்று பாகிஸ் தான் அதிபர் அயூப்கானு டன் பேச்சுக்கள் நடத்தி ஞர்.

இந்தப்பேச்சுக்கள், உத் தேச இந்திய- பாகிஸ்தான் மந்திரிகள் மகாநாடு பற்றி ஆலோசிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

திரு. கேவல்சிங் இன்று புதுடில்லி செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஹம்ப்ரி

சைகோன், பெப் 10
அமெரிக்க துணை அதிபர் திரு. ஹம்ப்ரி இன்று சைகோன் வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

தமது ஆசிய சுற்றுப் பிரயாணத்தின்போது அவர் தாய்லாந்துக்கும் ஆஸ்திரே லியாவுக்கும் செல்லுவார் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

## பாப்பரசர் கோரிக்கை

வத்திக்கான்நகர், பெப். 10
இந்தியாவின் உணவு நெருக்கடியைத்திர்ப்பதற்கு அந்த நாட்டுக்கு சகல உதவி களும் அளிக்கவேண்டு மென்று உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்கு பாப்பர சர் போல் கோரிக்கை விடுத் துள்ளார்.

இந்தியாவுக்கு அமெரிக்கா உதவியளிப்பது பற்றி அவர் குறிப்பிடுகையில்; வத்திக் கானும் இந்தியாவுக்கு நன் கொடை அளித்திருக்கிற தென்று தெரிவித்தார்.

## டோக்கியோவில் வெங்கட்ராமன்

டோக்கியோ, பெப். 10
தமிழ்நாட்டு தொழில் மந்திரி திரு. வெங்கட்ரா மன் நேற்று இங்கு வந்து சேர்ந்தார். இவர் இங்கு பதினைந்து தினங்கள் தங்கி யிருப்பார்.

## முதல் கப்பல் வந்தது

பம்பாய், பெப். 10
இந்தியாவுக்கான அமெரிக் காவின் முதலாவது உணவுக் கப்பல் நேற்று பம்பாய் வந்து சேர்ந்தது. இக்கப்ப லில் 23,000 தொன் கோதுமை உள்ளது.

## மாதர் படையெடுப்பு'

வாஷிங்டன், பெப். 10
அமெரிக்காவின் வியட் னும் கொள்கையைக் கண் டித்து நேற்று சுமார் 1,500 மாதர்கள், அமெரிக்க அதி பர் மாளிகைக்கு அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## காஷ்மீரில் பனிப்புயல்

ஸ்ரீநகர், பெப். 10
ஜம்மு, காஷ்மீரில் பனிப் புயல் வீசுகிறது. இவ்வளவுபனி காரணமாக கடந்த மூன்று தினங்களாக ஸ்ரீநகருக்கு விமானப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

## கிலி பிடித்து ஓடியதில் 10 பேர் பலி

ஜோகன்னஸ்பேர்க். பெப். 10
ஜோகன்னஸ் 3 பர்க்கில், ஆபிரிக்கர்களுக்கான இரவு நேர விடுதியில் பொலிஸார் சோதனையிடச் சென்ற போது, அங்கு கூடியிருந்த வர்கள் பொலிஸாருக்குப் பயந்து குறுகலான மாடிப் படிகள் வழியாகவிழுந்தடித் துக் கொண்டு ஓடினுர்கள். அப்போது அக்கூட்டத்தில் பத்துப்பேர் நெரியுண்டும் மிதிபட்டும் மாண்டனர். சுடப்பட்டதில் ஒருவருக்கு இலேசான காயம் ஏற்பட் டது.

கைதுசெய்யப்பட்டுக்காவ லில் வைக்கப்பட்டிருந்தஒரு வர் தப்பியோடியதால், அந்த நபரை தேடுவதற் காக பொலிஸார் இங்கு சென்றனர்.

## முருகனுக்கு இமயத்தில் காவடி

ரிஷிகேசம், பெப். 10
இமயத்தில் அமைந்துள்ள சுவாமி சிவானந்த மகராஜ் ஆசிரமத்தில், குன்றுதோறு டும் குமரப் பெருமானுக்கு தைப்பூசத்தன்று காவடி விழா சிறப்பாக நடைபெற் றது. ஆசிரம அடியார்கள், கங்கைக் கரையில் காவடி கள் கட்டி எடுத்து பக்திப் பரவசத்துடன் முருகன் திருப்புகள் பாடி ஆடி, திருப்படி ஏறி காவடிகளை சந்நிதியில் சமர்ப்பித்து விசேஷ அபிஷேகம் அலங் காரம் அர்ச்சனைகள் செய் தனர்.

## பஸ் விபத்து: 21 பேர் பலி

லண்டன், பெப். 10
பிரயாணிகள் பஸ் ஒன்று பாலத்தின்மீது சென்று கொண்டிருக்கையில் பாலம் உடைந்ததால் பஸ் நதியில் விழுந்து விபத்துக்குள்ளா னது. இவ்விபத்தில் 21 பேர் மாண்டனர். 9 பேர் உயிர் தப்பினர்.

பலியானவர்களில் அதிக மானேர் குழந்தைகளே.

## நாஸருக்கு ஹோ செய்தி

கெய்ரோ, பெப் 10
ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸருக்கு வடக்கு வியட்னும் அதிபர் ஹோ-சி- மின் நேற்று செய்தி யொன்று அனுப்பியுள்ளார். இதுபற்றி உடனடியாக எது வும் அறிவிக்கப்படவில்லை.

## "கைத்தொழில் பயிற்சி அளிக்கவேண்டும்"

சாவகச்சேரி, வியா.
''பாடசாலைகளில் சிலர் விவேகிகளாய்ப் புத்தகப் படிப்பில் சிறந்து விளங்கு வர். சிலர் புத்தகப் படிப் பில் திறமைகாட்டமாட் டார்கள். அவர்களை நாட் டுக்கு உதவாதவர்கள் என்று நாமும் எண்ணக் கூடாது; அவர்களும் எண் ணக்கூடாது. அவர்களும் நாட்டுக்கு முக்கியஸ்தர்கள் என்பதை எல்லோரும் ஏற்று அவர்களை அவரவர் வல்லமைக்கேற்பக் கைத் தொழில், கமத்தொழில், கடற்ருெழில்களில் பயிற்சி யளிக்கவேண்டும்.''

இவ்வாறு உதவி வித்தி யாதிகாரி திரு. எல். எவ். கே. குலத்துங்கா தென் மராட்சி வளர்ந்தோர் கல்விநிலையத்தார் நடத்திய கூட்டத்தில் உரையாற்றும் போது கூறினுர்.

மேற்படி கூட்டம் சாவ கச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் வித்தியாதரி சியும், வளர்ந்தோர் கல்வி நிலையப் பொறுப்பாளரு மான திரு. ஏ. சிவகுரு தலை மையில் நடைபெற்றது.

உதவி வித்தியாதிபதி தொடர்ந்து பேசும்போது 200 மைல் தூரத்திலுள்ள நான் எனது கருத்தை உங் களுக்கு வெளிப்படுத்தமுடி யாமலும், நீங்களும் உங் கள் கருத்தை எனக்கு அறி விக்கமுடியாமலும் கஷ்ட மடைகிறேம். இந்த நிலை உடன் மாறவேண்டுமானுல் தமிழர் சிங்களமும், சிங்கள வர் தமிழும் கற்கவேண் டும் என்று கூறினுர்.

திரு. வி.என் நவரத்தினம் எம். பி.யும், திரு. ஆறுமுக வடிவேலுவும் வளர்ந்தோர் கல்விப் பொறுப்பாளர் திரு. எஸ். கந்தசாமியும், திரு. எஸ். கே. செல்லையா வும் வளர்ந்தோர் கல்வி பற்றி உரையாற்றினர்.

## சிரமதான மூலம் பாதை அமைத்தனர்

தாளையடி, வியா
தாளையடியை தனிவட்டா ரம் ஆக்குவதற்கு கிழக்கு மேற்கு எல்லைகளான அரை மைல் நீளமுள்ள கடற் கரைப் பிள்ளையார் கோவில் ஒழுங்கையையும் ஒரு மைல் நீளமுள்ள மடத்தடிப் பிள் ளையார் கோவில் ஒழுங்கை யையும் சிரமதான மூலம் காடுகளையும் பற்றைகளை யும் தாழையடி கி மு. அங் கத்தினர் வெட்டித் திருத் திப் பாதையை அமைத்துள் ளனர். பளை காரியாதிகாரி யும் உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் இதைப் பார்வையிட்டுச் சென்ற னர்.

## பெற்றேர் ஆசிரியர் சங்கத்தின் முயற்சி

அச்சுவேலி, புதன்
பெற்ருேரும் ஆசிரியரும் ஒத்துழைப்பதால் பல நல்ல கருமங்களை செய்து முடிக்க லாம் என அச்சுவேலி சரஸ் வதி வித்தியாசாலைப் பெற் ருேர் ஆசிரியர் சங்கத்தாரால் பாடசாலைக்கண்மையில் தொடங்கியுள்ள பாலர் வகுப்பை ஆரம்பித்துவைத் துப்பேசுகையில்ஒய்வுபெற்ற அச்சுவேலி கிராம விதானை யார் திரு. குமாரவேலு கூறி ஞர் இவ்வைபவத்தில் மேற் படி பாடசாலை ஆசிரியர் களும் பெற்றேர்களும் பங்கு பற்றினர். தலைமைஆசிரியர் திரு. மயில்வாகனம் வகுப் பின் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படவிருக்கும் நன்மையையும்பற்றி எடுத் துக் கூறினுர்.



யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் அண்மை யில் நடைபெற்ற சுதந்திரதின விழா கலைநிகழ்ச் சிகளின்போது யாழ். கலாக்ஷேத்திரம் மாணவன் செல்வன் எஸ். சிவபாதம் மயில்நடனமாடுவதை இங்கு காணலாம். நட்டுவாங்கம்: கீதாஞ்சலி வி. கே. நல்லையா.

## சமயநூல் அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, புதன்
வட்டுக்கோட்டை சிவன் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தினர்சைவசித்தாந்த யோகாசனப் பண்வகுப்புக ளுக்கு ஒழுங்காக வரும்சகல பிள்ளைகளுக்கும் ஒவ்வோர் ஆண்டும் சமய நூல்களை இல வசமாக வழங்கத் தீர்மா னித்துள்ளதாக மேற்படிசங் கத் தலைவர் பண்டிதர் க. மயில்வாகனம் தெரிவித்து பண வகுப்புக்குவந்த மாண வர்களுக்கு நூல்களை அன் பளிப்புச் செய்தார்.

## பிரிவுபசாரம்

மன்ஞர், வியாழன்
மன்னுர் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் கமத்தொழில் ஆணையாள ராகப் பதவி உயர்வுபெற விருப்பதையிட்டு மன்னுர் உணவுக்கட்டுப்பாட்டு ஊழி யர்களால் பிரிவுபசாரம் ஒன்று நடத்தப்பட்டது.

## திருடர்கள் நடமாட்டம் அதிகரிப்பு

பருத்தித்துறை, புதன்
வடமராட்சிப்பகுதியில் திருட்டுச்சம்பவங்கள் பெருகிவருவதால் பருத்தித் துறைப் பொலிஸ்பகுதி யினர் வடமராட்சிப்பகுதி மக்களுக்கு அவர்களது உடைமைகளைக் கவனமாக வைத்திருக்குமாறு எச்ச ரிக்கை விடுத்துள்ளனர்.

## வியட்னும்

வாஷிங்டன், பெப். 10
வியட்னுமுக்கு 480 கோடி டாலர் உதவி அளிப்பதை அமெரிக்க செனட்டின் முப் படைத்தலைவர்கள் ஆமோ தித்துள்ளனர்.

## மிருகங்களுக்கு புதிய ஊசி மருந்து

பெர்லின், பெப் 10
மிருகங்களுக்கு ஊசிமூலம் ஏற்றும் மிகச் சக்திவாய்ந்த மருந்து வகைகளை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய் கிறது. கடந்த 12 ஆண்டுக ளில் 40 புதிய மருந்துகளை இங்கு கண்டுபிடித்துள்ளது.

கன்றுகளுக்கு ஏற்படும் இரத்த பேதிகளிலிருந்து அவற்றின் உயிர்களைப்பாது காப்பதற்கான மருந்தொன் றும் கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. இதுஉலகம்புகழ்பெற்ற மருந்தாகும். மாடு, பன்றி, கோழி ஆகியவைகளுக்கு உணவுடன் கலந்தோ, உண வுக்குத் தெளித்தோ கொடுக் கப்படும் மருந்துகளும் கண்டுபிடித்துள்ளனர் இத ஞல் இந்த மிருகங்களின் அகால மரணம் வெகுவாகக் குறைந்துவிட்டது.

## வர்த்தக சந்தை

புதுடில்லி, பெப் 10
ஜெர்மன் ஜனநாயகக்குடி யரசில் லயிப்சிக் நகரில் நடைபெறவிருக்கும் சர்வ தேச வர்த்தகச் சந்தையில் (மார்ச் 6-16) 30 ஆசிய ஆபிரிக்க நாடுகள் கலந்து கொள்ளுமென்றுஎதிர்பார்க் கப்படுகிறது.

இந்தியா தனது உற்பத் திப் பொருட்களை பெரு வாரியாகக் கொண்டு வந்து காட்சிக்கு வைக்கும். ஐக் கிய அரபுக் குடியரசும் மின் சாரக் கருவிகள், இயந்திரங் கள், கருவிகள், மூக்குக்கண் ணுடிப் பொருட்கள் ஆகிய வற்றைக் காட்சிக்கு வைக் கும்.

## கண்ணுடிப் பசு

ஹவானு, பெப். 10
ஹவானுவில் (கியூபா) ஜெர்மன் ஜனநாயகக் குடி யரசு நடத்திய விவசாயப் பொருட்காட்சிக்கு 30,000 பார்வையாளர்கள் விஜயம் செய்தனர். 25,000 ஆவது பார்வையாளர் கியூபசு இள ம்பெண்ணுகும். பொருட்கா ட்சியில் வைக்கப் பட்டுள்ள கண்ணுடிப் பசுவைப் பற்றி ஹவானு நகரெங்கும் ஒரே பேச்சாக இருக்கிறது என்று அவள் கூறினுள். இது ஜெர் மன் ஜனநாயகக் குடியரசு அமெரிக்கக் கண்டத்தில் நடத்திய முதலாவது பொருட்காட்சியாகும்.

## மிகப் பெரிய ஆஸ்பத்திரி

பெர்லின், பெப். 10
பெர்லின் நகர சபையால் நடத்தப்படும் ஆஸ்பத்தி ரியே ஐரோப்பாவில் மிகப் பெரிய ஆஸ்பத்திரியாகும். அதில் 35 சிகிச்சை நிலையங் களும் 5,000 படுக்கைகளும் உண்டு. வருடந்தோறும் சுமார் 1 லட்சத்து 41 ஆயி ரம் நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறுகின்றனர்.

நஞ்சுண்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக இங்கு நிறுவப்பட்டுள்ள மத்திய நிலையம் ஒரு சிறிய நகரம் போல் காட்சியளிக்கி றது இந்த ஆஸ்பத்திரியை மேலும் விஸ்தரிப்பதற்காக பெருந்தொகை என பணம் அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

பருத்தித்துறை, புதன்
ஹாட்லிக் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக்கல்லூ ரிக்குமிடையே ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஹாட்லிக் கல் லூரி ஒரு இன்னிங்சும் 47 ரன் களாலும் மானிப்பாய் இந் துக்கல்லூரியைத் தோற்டித் தது.

ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த சி. சிறிஸ்கந்தராஜா 41 ரன்களைப் பெற்ருர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தொடர்நவீனம்

# வாஞ்சி மலை

— க. கனகலிங்கம் —

நான் யாரென்று பொறுத்திருந்து பாருங்கள் என்று கூறிநிறுத்தினான் கிழவன். நயவஞ்சகனின் போக்கைப் பச்சிளம் குழந்தைகளால் எவ்வாறு புரியமுடியும். பாவம், தாத்தா ஏன் நீங்கள் வழக்கத்திற்கு மாறாக ஒருமாதிரிப் பேசுகிறீர்கள். எங்களுக்கு என்னவோ பயமாயிருக்கிறதென்று கூறினார்கள். பிள்ளைகளே உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா என்று கூறி ஹ... ஹா என்று பலமாகச் சிரித்தான். அவன் சிரிப்பு வாஞ்சிமலைகளில் மோதி எதிரொலித்தது. சற்று நேரத்திற்கெல்லாம் கிழவன் பேச ஆரம்பித்தான்.

பிள்ளைகளே, எனக்குப் பன்னிரண்டு வயதாயிருக்கும்பொழுது தந்தையிடம் சென்று திரும்பிய நான், மேற்செல்ல இயலாமற் போகவே, ஆற்று மணற் பரப்பிலே இரவுப் பொழுதை நான் கழித்த பொழுது என்னை ஒரு கிழவன் அழைத்துச் சென்றதாகக் கூறினேன்; நினைவிருக்கிறதா? அந்தக் கிழவன் யாரென்று இப்பொழுது உங்களுக்குப் புரிகிறதா? யார் அந்தக் கிழவன்? அவன் நானேதான் உங்களை இங்கு அழைத்துவருவதற்காகத்தான் ஒரு கதையைச் சிருஷ்டித்தேன். உங்களை நம்பவைப்பதற்காக வெண்மணற் பரப்பிலே அலற்றைக் கூறிவந்தேன். என்று கம்பீரமாகக் கூறியதுமல்லாமல் தன் அசுர உருவத்தையும் காட்டினான்.

வான்போல் உயர்ந்த தோற்றம். நீண்டு வளர்ந்த கேசம். வாயை விட்டு வெளித்தோன்றிய பற்கள். பருத்த வயிறுகொண்ட கிழவனின் அசுர உருவத்தைக் கண்டு நடுநடுங்கினார்கள், சிறுவர்கள். சற்று நேரத்திற்கெல்லாம் கிழவன் 'உய்உய், கூகூ என்று கத்தினான். கிழவனின் கத்தல் கேட்ட சிறுவர்கள் மயங்கி விழ்ந்தனர்.

(தொடரும்

# 1968-ல் சந்திரனை மனிதன் வலம் வரலாம்!

— மகான் —

[மனிதனால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை [என்று வீரம் பேசும் விஞ்ஞானிகள், அடுத்த இரண்டு வருடங்களுக்குள் சந்திரமண்டலத்துக்கு மனிதனை அனுப்பி வைப்பது அநேகமாக சாத்தியமாகிவிட்டது. 1968-ம் ஆண்டுக்குள் சந்திரனை மனிதன் வலம் வருவான் என்பது உறுதி.]


சந்திரனை எட்டிப்பிடிப்பதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டியிட்டுக்கொண்டிருக்கின்றன. இப்போட்டியில் இந்த நிமிடநேரம்வரை முன்நிற்பது ரஷ்யா தான்.

### சாதனை

''லூனா—9'' என்ற விண்வெளி புகைப்பட நிலையத்தைச் சந்திரமண்டலத்துக்கு ரஷ்யா வெற்றிகரமாக அனுப்பிவைத்ததன்மூலம் சந்திர மண்டலப் பிரயாணப் படியில் மற்றுமொரு அடி எடுத்துவைக்கப்பட்டிருக்கிறது.

''லூனா—9'' சாதித்தது என்ன?

ரஷ்ய விஞ்ஞானிகளின் 'கட்டளை'க்கிணங்க, சந்திர மண்டலத்தில் மெதுவாக தரையிறங்கி அங்குள்ள அற்தரங்கமான தகவல்களை அம்பலப்படுத்தியிருக்கிறது. ''பீப்... பீப்...'' என்ற ஒலி வடிவங்களில் சமிக்ஜைகளை பூமிக்கு அனுப்பி தனது அற்புதமான வேலைகளை முடித்துவிட்டு அங்கேயே நிலைபெற்றிருக்கிறது. இது அனுப்பிய சமிக்ஜைகளை ஒளி வடிவங்களில் கண்ட விஞ்ஞானிகள், வியக்கத்தக்க உண்மைகளைப் பெற்றுள்ளனர்.




### புழுதி மண்டலம்

சந்திரனில் புழுதி மண்டலம் இல்லை என்று விஞ்ஞானிகள் இப்பொழுது தெரிவித்துள்ளனர். சந்திரனின் மேற்பரப்பு ஓரளவு கடினமானதென்றும் மனிதன் அதில் புதையாமல் இறங்க முடியும் என்றும் இவர்கள் கருதுகின்றனர். ஆனால் இதனை முழுவதுமாக ஏற்கமுடியாது ''லூனா—9''க்கு அகப்பட்ட ஓரளவு பகுதிகளில்தான் இவ்விதமான நிலப்பரப்பு இருக்கிறது. ஆனால் மற்றைய பகுதிகள் எத்தன்மை வாய்ந்தது என்பது இன்னும் கண்டு கொள்ளப்படவில்லை. இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களிலிருந்து சில உண்மைகள் வெளியாகியிருக்கின்றன

○ சந்திரமண்டலத்தின் சில பகுதிகள் கடினமானவை. இப்பகுதிகளில் மனிதன் சுயமாக இறங்கி நடக்க முடியும். ○ இதுவரைகிடைக்கப்பெற்ற தகவல்களின்படி பயங்கரமான எரிமலைகள் இல்லை. சிறிய கூழாங்கற்களும் சிறுசிறு பள்ளங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. ○ புழுதிப் படலத்தில் மனிதன் மூழ்கிவிடுவான் என்ற அச்சம் நீக்கப்பட்டிருக்கிறது.

### சாதகமான 'காலை நிலை'

''லூனா—9'' சந்திர மண்டலத்தில் தரையிறங்கிய பொழுது அங்குள்ள 'காலை நிலை'யும் அதற்குச் சாதகமாக இருந்திருக்கிறது. போதுமான சூரிய வெளிச்சம் அங்கு நிலவியது-'லூனா—9'-க்கு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

அடுத்த கட்டம் என்ன? சந்திர மண்டல யாத்திரைக்கான போட்டி இனி மேலும்முரமாக இருக்கும், அமெரிக்காவினதும் ரஷ்யாவினதும் விண்வெளி நிலையங்கள் போட்டிபோட்டுக் கொண்டு சந்திர மண்டலத்தில் இறங்கும். அதிசயமான தகவல்கள் வெளியாகும். ஒருவரையொருவர் அறியாமல் திரைமறைவில்பல நாடகங்கள் நடைபெறும். இந்த நாடகங்களில் பல உயிர்கள் பலியானாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### விஞ்ஞானிகளின் உண்மைநிலை

சந்திரனில் ஒரு விண்வெளி நிலையத்தை மெதுவாக இறக்குவதில் அமெரிக்காவும் ரஷ்யாவும் போட்டியிட்டதில் ரஷ்யா இப்பொழுது வெற்றி கண்டிருப்பது ரஷ்யாவின் முன்னேற்றத்தை நன்கு வெளிப்படுத்துகிறது. சந்திரனில் அவர்கள் தான் முதலில் காலடி வைப்பார்கள் என்பதும் ஓரளவு தெளிவாகியிருக்கிறது.

### இவ்வருடத்தில்

1966-ம்ஆண்டு முடிவடைவதற்குள் சில அற்புதமான தகவல்களை நாம் அறியக் கூடியதாகவிருக்கும். சந்திரனுக்கு மனிதனை அனுப்புவது இப்பொழுது சாத்தியமாகிவிட்டாலும், அதனை உடனடியாக விஞ்ஞானிகள் செய்து கொள்ளமாட்டார்கள். மனிதனை அங்கு உயிருடன் அனுப்பி உயிருடன் மீட்பதில்தான் விஞ்ஞானிகளின் முழுக்கவனமும் தங்கியிருப்ப

(5ம் பக்கம் பார்க்க)

தோற்றம்: 12-2-1809 மறைவு: 14-4-1865

# ஆபிரகாம்லிங்கன்

— ச. சிவராசசிங்கம் —



அமெரிக்காவின் பதினாறுவது ஜனாதிபதியாக இருந்து புகழ் படைத்த ஆபிரகாம் லிங்கனின் பிறந்தநாள் நாளையதினம் ஆகும். அமெரிக்க மக்களின் உள்ளத்தில்மட்டுமின்றி, உலகத்து மக்கள் தம் உள்ளங்களிலேயே தனக்கென தனியானதொரு இடத்தை பிடித்துக்கொண்டவர் ஆபிரகாம்லிங்கன்.

இவர் பன்னிரண்டாம் திகதி பெப்ரவரிமாதம் ஆயிரத்து எண்ணூற்று ஒன்பதாம் ஆண்டு சாதாரண குடிமகன் ஒருவனுக்கு மகனாகப் பிறந்தார். கல்வி வேட்கையால் இரவல் புத்தகங்கள் வாங்கியும், தெரு வெளிச்சத்திலும் கற்று உழைப்பால் உயர்ந்தவர். தனது அயராத உழைப்பினால் அமெரிக்காவின் பதினாறுவது ஜனாதிபதியானார்.

அடிமை முறையை அமெரிக்காவில் இருந்து அடியோடு அழித்துவிடப் பாடுபட்டார். வெற்றியும் கண்டார். நேர்மைக்கும் திறமைக்கும்எடுத்துக்காட்டாக விளங்கிய ஜனாதிபதிகளில் அவர் குறிப்பிடத்தக்கவர். 'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' என்ற குறளுக்கு இலக்கணமானார் ஆபிரகாம் லிங்கன்,

இவர் 1865-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினைன்காம் திகதி ஒரு இனத்துவேஷக்காரனால் சுட்டுக்கொல்லப் பட்டார். தமது அயராத உழைப்பினால் அமெரிக்காவை ஐக்கியப்படுத்திய அறிவுச்செல்வம் - மறைந்து பல நூற்றுண்டுகள் சென்றாலும் அவர் புகழ் ஒளி மறையவில்லை. அவர் வழியை உலகம் மறந்து விடவுமில்லை.

## பொதுமேடை

க. கனகலிங்கம் எழுதும் 'வாஞ்சிமலை' தொடர்நவீனம் பாராட்டக்கூடியது. வெகு ஜோர்.

—எஸ். வைத்தியநாதன், கந்தர்மடம்.

ஃ ஃ ஃ

'வாஞ்சிமலை' தொடர் கதை அற்புதமாக இருக்கிறது.

— எம். சௌந்தரம், உடுவில்.

ஃ ஃ ஃ

கனகலிங்கத்தின் தொடர் நவீனம் எங்களுக்கு நல்ல விருந்தாக இருக்கிறது. அவருக்கு எமது பாராட்டுதல்கள்.

—ச. ம. அமீன், யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

'வாஞ்சிமலை' கனகலிங்கத்துக்கு எமது பாராட்டுதல்கள்.

— க. யோகலிங்கம், திருக்கோணமலை.

ஃ ஃ ஃ

'வாஞ்சிமலை' தொடர் நவீனத்தைப் பாராட்டி கோண்டாவில் ஆர். யோகலிங்கம், சுன்னாகம் எஸ். மனோன்மணி, கல்முனையைச் சேர்ந்த க. மயில்வாகனம் ஆகியோரும் எழுதியுள்ளனர்.

# மூளைக்கு வேலை

மூளைக்கு வேலைப்பகுதியில் கலந்துகொள்பவர்களின் தொகை வாரந்தோறும் அதிகரித்துக்கொண்டே வருவதால், விடைகளைத் தரம்பிரித்து எடுப்பது பெரும் சிரமமாக இருக்கிறது. கடந்தவாரம் கேட்கப்பட்ட இரண்டு கேள்விகளுக்கும் ஏராளமானவர்கள் விடைஎழுதியிருந்தனர். ஆனால் இரண்டு கேள்விகளுக்கும் சரியான விடையெழுதியவர்களின் தொகை மிகவும் குறைவே.

இரண்டு கேள்விகளுக்கும் சரியாக விடையனுப்பியவர்களின் பெயர்கள் மட்டுமே இங்கு வெளியாகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சரியான விடைகள்: முதலாவதுகேள்விக்குரிய விடை: ஜான்ஸிராணி லக்ஷ்மிபாய்.

இரண்டாவது கேள்விக்குரிய விடை: 3—11—1957.

சரியான விடையெழுதியவர்களின் பெயர்கள் வருமாறு: இவர்களுக்கு எனது விசேஷ பாராட்டுதல்கள்.

சீ, அலோசியஸ், செம்பியன்பற்று; சி, தேவகுமார், இணுவில் மேற்கு; சமா தியாகராஜா, தொண்டைமானாறு; சௌந்தரராஜன் கணேசஐயர், அனலைதீவு; வி. தம்பிஐயா, அரியாலை; ந. பத்மநாதன், யாழ்ப்பாணம்; பெ. தர்மசிறீராசா கரவெட்டி கிழக்கு; மா. குணநாயகம், கரவெட்டி; த. கோபாலபிள்ளை, நெடுந்தீவு மேற்கு; பி. எம். ஞானானந்தன், கிளிநொச்சி; வி. பரமேஸ்வரி அம்மா, சிவன்கோவில், காரைநகர்; கே. என். பாலாம்பிகை, சாம்பல்தீவு, திருக்கோணமலை; டி. கருணாதேவி நெடுந்தீவு; அம்பலவாணன் நாகராசா, அனலை வடலூர்; த. மகேஸ்வரன், நாயன்மார்கட்டு; எஸ். என். கமலேந்திரன், கல்வியங்காடு; தி, சரவணபவன், சுன்னாகம்; வி. ஏ. திலகம், மயிலங்காடு, அ மகேந்திரன், கொக்குவில் கிழக்கு; தி சுலோசனா, சுன்னாகம் இராவநாதன் கல்லூரி; பொன்னுத்துரை ரவீந்திரன், நல்லூர்; ஐ முருகையா, சூராவத்தை; முத்தையா தனபாலசிங்கம். நல்லூர்; எ. பயஸ், பாஷையூர்; ந. செல்லக்கிளி, சுன்னாகம்; இந்திராணி சொர்ணகாந்தி ஆறுமுகம், பருத்தித்துறை; கு இராஜகோபால், நல்லூர்; ராணி பவளகாந்தி ஆறுமுகம், பருத்தித்துறை; த. பரமநாதன், தொண்டைமானாறு; எஸ். கணபதிப்பிள்ளை, பூநகரி; எம் புஷ்பா, கரவெட்டி வடக்கு; என். எஸ். கோவிந்தராம், யாழ்ப்பாணம்; எம் எல் எம் இக்பால். யாழ்ப்பாணம்; வி ஈஸ்வரி அம்மா, சிவன்கோவில், காரைநகர்; உ சுப்பிரமணியம், யாழ்ப்பாணம்; ப கணேசலிங்கம்.புத்தூர் கிழக்கு; ஜெலீமா அமீன், யாழ்ப்பாணம்; வி பரமேஸ்வரசம்மா, காரைநகர்; ச ஆனந்தராசா, பூநகரி; இ. நாகராசா, மறவகுறிச்சி, பூநகரி; சுமதி, பி எஸ் சர்மா, யாழ்ப்பாணம்; என் எம் சே நடராசா, பெரிய தம்பனை, மடுக்கோவில்; சி ஜே செயரத்தினம், அல்வாய்; சு. சேய்மானந்தன், நல்லூர்; ஏ இரத்தினசோதி, யாழ்ப்பாணம்; ச யோண் தியாகராசா, நெடுந்தீவு; சி சிவபாதம், கிளிநொச்சி; து கருணானந்தசிவம், கிளிநொச்சி; எம் எல் எம் அமீன், யாழ்ப்பாணம்: த திசநாதன், பூநகரி; தா சிறீதரன், காரைநகர்; க ஆனந்தஜோதி, யாழ். இந்துக்கல்லூரி; கே வி நடராசா கிளிநொச்சி; நா குணசேகரன், பூநகரி; யோசப் மரியா திரேசா, மாணிகாவத்தை, கொழும்பு: ம வி இராஜநாயகம், கிளிநொச்சி; ஆ வை முருகையா, அளவெட்டி வடக்கு; உ தர்மலிங்கம், யாழ்ப்பாணம்; செ சரோஜினிதேவி, உடுவில்: மா புஷ்பராணி, தேவரையாளி இந்துக்கல்லூரி; ஐ வசந்தகுமாரி, நெடுந்தீவு; நா மெய்கண்டமூர்த்தி, கிளிநொச்சி; ஹென்றி அந்தோனிப்பிள்ளை, மைலிட்டி; மு. சிவபாதசுந்தரம், கிளிநொச்சி; பி எஸ் மரியதாஸ், கிளிநொச்சி; ப மகேந்திரதாசன், யாழ்ப்பாணம்; ந செல்வராஜன், தெல்லிப்பளை மேற்கு; சு சிவஞானசக்திவேல், உடுவில்: மு செபஸ்தியாம்பிள்ளை, பாஷையூர்; நாகமணி சிவஞானம், நல்லூர்; இ அருமைநாயகம், திருநெல்வேலி கிழக்கு; எஸ் [illegible] திஸநாயகம், உசன், மிருசுவில்; சி தேவராஜா இணுவில் மேற்கு; வி ஈஸ்வரன், காரைநகர்; எம் புளோரம்மா, சின்னக்கடை, மன்னார்; சி சண்முகராசா, அளவெட்டி தெற்கு; மு சுப்பிரமணியம், கரணவாய் வடக்கு; அ சோ மகாலிங்கம், நாவற்குழி; மா சேவியர்பெர்னாண்டோ யாழ்ப்பாணம்.

[illegible] எனக்கும் ஓய்வு. மீண் [illegible] சந்திப்போம்.

--சாந்தா

அடுத்த

''மாணவர் மலர்''

18 - 2 - 1966-ல்

வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில விடுமுறை கழக வகுப்புகள் ஊர்காவற்றுறையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில விடுமுறைக் கழக வகுப்புகள் ஊர்காவற்றுறை அரிச். மேரி பாடசாலையில் வடபிரதேசகல்வி அதிகாரி திரு. எஸ். தணிகாசலத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

திரு. தணிகாசலம் விடுமுறைக்கழக வகுப்புகளை தொடக்கிவைத்துப் பேசுகையில் ஆங்கிலக் கல்வியின் அவசியம்பற்றியும் இப்படியான விடுமுறைக்கழக வகுப்புகள் ஆசிரியர்களுக்கு பெரிதும் நன்மைபயக்குமென்றும் குறிப்பிட்டார்.

ஆங்கில கல்விப்பகுதி அதிகாரி திருமதி ஆர். நவரத்தினமும் கருத்துரை வழங்கினர்.


REGAL--JAFFNA
NOW SHOWING
INGRID BERGMA'N
ALAIN DELON
in
THE YELLOW ROLL ROYCE
(Panavision-Metro Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
பானுமதி - ராஜன்
நடித்த
அன்னை

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
ஆலய மணி
தினசரி 4-15க்கு மட்டும்
த ரெறர்
வயது வந்தவர்களுக்கு மட்டும்


## 1968-ல் சந்திரனை ..

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

தால் இத்திட்டத்தை சிறிது சிறிதாகத்தான் அவர்கள் பூர்த்திசெய்வார்கள். பலரும் நினைப்பதுபோல ரஷ்யாவின் அடுத்த கட்டம் சந்திரனுக்கு மனிதனை அனுப்புவதே என்பது நடைபெறாத தொன்றாகும். ஆனால்... இந்த வருடத்துக்குள்ளாக ரஷ்யா ஒரு இயந்திரமனிதனை சந்திரனுக்கு அனுப்பி வைக்கும் என்பது கண்கூடு.

அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் சந்திரனை அது பிடிப்பதற்கு பல சாதனைகளைப் புரியவேண்டியிருக்கிறது. விண்வெளி நிலையத்தை சந்திரனில் மெதுவாக இறக்குவதில் அமெரிக்கா இன்னும்வெற்றி பெறாதது.., அதன் முன்னேற்றத்துக்கு ஒரு முட்டுக்கட்டையாகவே இருக்கிறது.

ரஷ்யாவைப் பொறுத்தமட்டில் அதன் அடுத்த கட்டம் பல விண்வெளி நிலயங்களை அங்கு அனுப்புவதே இதனைத் தொடர்ந்து இயந்திரமனிதன் அங்கு அனுப்பப்படுவான். அதற்கடுத்தாற்போல...... "லைக்கா" ரக நாய்கள் அங்கு சென்றுவரும். இதன் பின்னர்... விண்வெளிக் கப்பலில் ரஷ்ய வானவெளி வீரன் சந்திரனை வலம்வருவான்! இதன் பின்னரே மனிதனின் காலடி சந்திர மண்டலத்தில் பதியும்!

விண்வெளிக்கப்பலில் மனிதன் சந்திரனைச் சுற்றிப் பார்க்கும் திட்டம் அநேகமாக 1968-ம் ஆண்டுக்குள் பூர்த்தியாகிவிடும். அப்படியென்றால்... 1968-ம் ஆண்டு பிற்பகுதியில் அல்லது 1969-ம் ஆண்டு ஆரம்பத்தில் சந்திரனில் மனிதன் இறங்குவான்!

இந்த மனிதன் ரஷ்யாவையோ அல்லது அமெரிக்காவையோ சார்ந்தவனாக விருக்கலாம். இதிலும் அதிக வாய்ப்பு ரஷ்யாவுக்கே இருக்கிறது!

## வானொலி

### கொழும்பு

வெள்ளி 11-2-66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15படத்திலிருந்து.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்திநெறி—சைவசமய சஞ்சிகை, 7-15 கதாப்பிரசங்கம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 கேர்ந்தஇசை, 10-00 நேயர்விருப்பம்.

## யுனைட்டெட் வெற்றி

சுழிபுரம், வியாழன்

கொக்குவில் யுனைட்டெட்கிளப் கோஷ்டிக்கும்சுதுமலை விளையாட்டுக் கேகஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் யுனைட்டெட்கிளப் கோஷ்டியினர் 4 கோல்களைப் போட்டு வெற்றிபெற்றனர்

## வரி விளம்பரம்

### தேவை

அரசாங்க இலாகாக்களிலும் பிரத்தியேக ஸ்தாபனங்களிலும் அவர் அவர் தகுதிக்கு உரிய அநேக வேலைகள் உண்டு. 18—40 வயசு உள்ள 7-ம் வகுப்பு முதல் எஸ். எஸ். ஸி. வரை தராதரமுள்ளவர்கள் ரூபா 2/- போஸ்டல் ஓடர் அனுப்புக. முழுவிபரங்களுக்கும் விண்ணப்பபத்திரத்துக்கும் றஸ்ற் டுப்பிளிகேற்றர், மாவிட்டபுரம், தெல்லிப்பழை, 1906

எமது கூட்டுறவு சங்கத்தின்கீழ் இயங்கும் A. B. பண்டகசாலைகளுக்கு இரண்டு மனேச்சர்கள் தேவை. ஆங்கிலம் அல்லது தமிழ் எஸ். எஸ். ஸி. தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தவராயும், 22--35 வயதுக்கு மிடைப்பட்டவராயும் இருத்தல் வேண்டும். சம்பளம்: 100—150. எல்லாப் படிகளும் உட்பட. விண்ணப்ப முடிவு: 15-2-66 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு. தகைமைகள் சரியென சங்க முகாமையாளர் ஏகமனதாக ஏற்றுக்கொண்டால். ரொக்கப் பிணை 1000/-. ஆதனப் பிணை 2000/- கட்டி பண்டகசாலையை பொறுப்பேற்கலாம். இங்ஙனம். ஆ. இராசதுரை, காரியதரிசி, இராமநாதபுரம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி. 1908

### WANTED

Wanted a Lady typist. Should posses a sound knowledge of the English Language. Apply Engineering Power Unit Hospital Road, Jaffna. 1911

### விற்பனைக்கு

சுப்பிரமணிய சாஸ்திரிகள், இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம், ஆனந்த போதினி திருக்கணித பஞ்சாங்கம், பல சோதிட நூல்கள் விற்பனைக்குண்டு. சர்மா, புலவர் இல்லம், காரைநகர். 1912

### கல்வி

இலங்கையின் தரமுயர்ந்த தபால்மூலம் கல்வி ஜி. சி. ஈ. சாதாரணம்/உயர்தரம், ஜி. ஏ. கியூ./பி. ஏ. 22 ஸ்கொலசிப்புகள் வழங்கப்படும். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி/கரவெட்டி. 1881

வெற்றி உறுதியளிக்கப்படுகிறது. எங்கள் அஞ்சல் போதனாமுறைக் கல்வி சிறந்த பயிற்சி அளிக்கிறது. பி. ஏ. பொருளாதாரம், கலை, கைப்பணி பொருட்காட்சி பற்றிய விபரங்கள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1882

பீ. ஏ; ஜீ. ஏ. கியூ; ஜீ.சீ.ஈ உயர்தரம் கலையியல் ஒரு வருடப் பயிற்சி, சாதாரணம் கலை/விஞ்ஞானம்; வர்த்தக வகுப்பு தமிழ்/ஆங்கிலம் சிங்களம்; ஜே. எஸ். சி. ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. சித்திஉறுதி! உடனே சேருங்கள். யாழ்ப்பாண டியூட்டோறியல் கல்லூரி, கைலாச பிள்ளையார் கோவிலடி, நல்லூர்-யாழ்ப்பாணம் கிளை: (நெல்லியடி இன்டஸ்ரியல் வேக்ஸ் முன்பாக) வதிரி-கரவெட்டி. 1901

பிரவேசப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, ஜீ. சி. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/வர்த்தகம், ஜீ. சி. ஈ. உயர்தரம் கலை/விஞ்ஞானம், ஜீ. சி. ஈ. விஞ்ஞானம் ஆரம்ப வகுப்புகள் விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை நெல்லியடி கரவெட்டி/107 பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 1856

## பனங்காமம் கி. ச. தேர்தல் நியமனப் பத்திரங்கள் தாக்கல்

### கணவனின் பெயரை மனைவி பிரேரித்தார்

மாங்குளம், புதன்

பனங்காமம் கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் மன்னார்ப்பகுதி உதவித் தேர்தல் கமிஷனர் திரு. நா. சிதம்பரப்பிள்ளையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பனங்காமம் கிராமசபையைச் சேர்ந்த நட்டான் கண்டல் கிழக்கு வட்டாரத்துக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோது தற்போதைய அங்கத்தவரான திரு. ச. ஆறுகத்தை எதிர்த்து திரு. கந்யா கோவிந்தபிள்ளை தமது நியமனப்பத்திரத்தைத்தாக்கல் செய்தார். அவரின் பெயரை அவர் மனைவி நேசமலர் பிரேரித்தார்.

நட்டான் கண்டல் மேற்கு வட்டாரத்துக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டபோது தற்போதைய அக்கிராசனர் திரு. சூரியர் தம்பையாவின் பெயரை திரு. பெரியதம்பி இரத்தினசிங்கம் பிரேரித்தார். அவரைஎதிர்த்துப் போட்டியிடும் திரு. மாரிமுத்து இராசு என்பவரின் பெயரை தமபைாவின் பெயரைப் பிரேரித்தவரின் சகோதரரான திரு. பெரியதம்பி சின்னத்தம்பி பிரேரித்தார்.

இம்மாத இறுதியில் நடைபெற வேண்டிய அக்கிராசனர் தெரிவும், தேர்தலும் அரசாங்கத்தின் அவசரகால நிலைமை காரணமாகப் பின் போடப் பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## வரவேற்பு அளிக்க தீர்மானம்

மானிப்பாய், வியாழன்

மார்ச் மாதம் வரும் போயாதினத்தில் மருதடிப் பிள்ளையார் கோவிலில் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு ஒரு வரவேற்புபசாரம் நடாத்துவதென அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் உடுவில் கிளை தீர்மானித்துள்ளது. இக்கூட்டத்திற்கு புறக்டர் திரு. கே. சோமஸ்கந்தன் தலைமை வகித்தார்.

இந்த வரவேற்புச் சபையில் எல்லாக் கட்சிகளிலிருந்தும் இருபது பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) நவா (கொம்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)
மொடேர்ன் (பண்டாரவளை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்)
தீவொளி (நூரளை) கல்யாணி (நாவலப்பிட்டி) சந்தியா (கம்பளை)



பூம்புகார்
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
கே. பி. சுந்தராம்பாள்,
ராஜஸ்ரீ, நாகேஷ் - மனோரமா, ஓ. ஏ. கே. தேவர்
மற்றும் பலர் நடித்து
அனேகரின் பாராட்டுதலைப்பெற்ற திரை ஓவியம்.

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
விடுமுறை நாட்களில் காலை 10 மணிக்கு
ஜெமினி, சிவாஜி, சாவித்திரி
நடித்த
பதிபக்தி


## சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள்

சுழிபுரம், வியாழன்

பொன்னாலை நாமகள் சனசமூக நிலைய அங்குரார்ப் பணக்கூட்டம் திரு செ. நடராசா தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்; தலைவர்: ஆ. கந்தசாமி, உபதலைவர்: சி. சிங்கராசா, காரியதரிசி: அ. பாலு, உபகாரியதரிசி: மு. இராசரத்தினம், பொருளாளர்: திரு. க. வீரசிங்கம், உபபொருளாளர்: க. பசுபதி, 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.


இதோ! உங்களுக்கு குறைந்த செலவில் அதிக சௌகரியமான வீடு

ஆட்டிஸன்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் முற்றிலும் கொன்கிறீற்றால் கட்டப்பட்ட வீடுகள் (Factory Cast Concrete Houses).

நடுத்தர வகுப்பாருக்கும், தொழிலாளி வகுப்பாருக்கும் ஏற்றமாதிரிகளில், உங்கள் தேவைக்குஉகந்தவீடுகள்கட்டி கொடுக்கிறோம்.

கடன்வசதியும் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும் விபரங்களுக்கு:—

பிரதிநிதி,
ஆட்டிஸன்ஸ் லிமிட்டெட்
90, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனுவின் 3-வது அணுகுண்டு

## அடுத்தமாதத்தில் வெடிக்கலாம்

லண்டன், பெப். 10

கம்யூனிஸ்ட் சீனு தனது மூன்ருவது அணுகுண்டை ஒருசில வாரங்களில், அநேகமாக மார்ச் மாதத்தில் வெடிக்கலாம் என்று தெரியவருகிறது.

அணுகுண்டு பரீட்சையை நடத்த சீனு தயாராகிவிட்டதென்றும் அதற்கான சகல ஏற்பாடுகளும் அடுத்த வாரத்திற்குள் பூர்த்தியாகிவிடுமென்றும் கூறப்படுகிறது.

கம்யூனிஸ்ட் சீனு, தனது முதலாவது அணுகுண்டை 1964-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வெடித்திருந்தது. இரண்டாவது அணுகுண்டை கடந்த வருடம் மே மாதத்தில் வெடித்தது.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதென்றும்தீர்மானித்தால், நிர்வாகச் சிக்கல்களும், செலவுகளும்கூட மிகவும் குறையும். தேசிய அரசாங்கம் இதைத் துணிச்சலுடன் செய்யுமா? யு. என். பி. தேர்தல் விஞ்ஞாபனத்திலும் முன்னர் இந்தயோசனை கூறியிருந்தனர்.

இப்போது அதைப்பற்றி பேச்சு மூச்சே காணேம். நமது அரசியல் அமைப்பை மாற்றும் போது இதைப் பற்றித் தீர்மானிக்க நல்ல சந்தர்ப்பமாகும்.

ஃ ஃ

ஊழித்தீயாய் நின்ருய் உள்குவார் உள்ளத்தாய்.
வாழித்தீயாய் நின்ருய் வாழ்த்துவார் வாயானே,
பாழித்தீயாய் நின்ருய் படர்சடை மேற்பனி மதியம், ஆழித்தீ ஐயாறர்க்காளாய் நான் உயர்ந்தேனே.

—அப்பர்சுவாமிகள்

---

## சுவிட்சர்லாந்தின் . . .

(2ம்பக்கத்தொடர்ச்சி)

மாற்றுவதற்கான விஷயங்களில் அரைக் கான்டனுக்கு அரைவாக்கே உண்டு. 3 கான்டன்கள் இரு அரைக் கான்டன்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரைக்கான்டன் ஒவ்வொன்றுக்கும் பூரணசுயாட்சி உரிமை உண்டு. ஒவ்வொரு கான்டனும் ராஜாங்க சபைத் தேர்தல் விஷயமான நடைமுறைகளைத் தாமே சுதந்திரமாக வகுத்துக்கொள்ளலாம். சில கான்டன்கள் தங்களது 'பெரிய கவுன்ஸில்' மூலம் ராஜாங்க சபைக்குத் தன் அங்கத்தவர்களை மறைமுக தேர்தல் மூலமும் அனுப்புகின்றன. சமயப் போதகர்கள், சமஷ்டி அதிகாரிகள் தெரிவு செய்யப்படலாமா கூடாதா என்பதை நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையும் கான்டன்களுக்கு உண்டு. இதற்கான விதிகளைத் தலைமை அரசாங்கம் நிர்ணயிப்பதில்லை.

### சமஷ்டி சபை

தலைமைச் சமஷ்டி அல்லது 'கான்பெடரேஷ'னுக்கு தலைவர் கிடையாது கான்டன் சபைக்கும் தேசாதிபதி இல்லை. ஏழுபேர் அடங்கிய சமஷ்டி சபையே நிர்வாகக் குழுவாகும். கான்டன்களிலும் ஏழுபேர் அடங்கிய நிர்வாக சபையுண்டு. சில கான்டன்களில் ஐவரே உள்ளனர். பேர்ன் கான்டனில் ஒன்பதுபேர் இருக்கின்றனர்.

(நாளை முடியும்)

---

## தவருன ஊசி செலுத்தப்பட்டது

### மாணவன் புகார்

சாவகச்சேரி. வியா.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் சிகிச்சை பெறச்சென்ற ஒரு மாணவனுக்குத் தவறுதலாக, வேறு ஊசி போடப்பட்டதாகவும், இதையிட்டு அம்மாணவன் உடனடியாக டாக்டரிடம் புகார் செய்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பயிலும் அம் மாணவனுக்கு விட்டமின் ஊசி ஏற்றும்படி டாக்டர் சிட்டில் எழுதியிருந்தாரென்றும், தவறுதலாக வேறு ஊசி ஏற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

---

## உரியவர் யார் ?

யாழ்ப்பாணம், வெள்ளி

அடைவுச் சிட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

## மீண்டும் தலைவராகத்தெரிவு

குமுழமுனை, திங்கள்

சமீபத்தில் தனது தலைவர் பதவியை ராஜினுமாச் செய்த முல்லைத்தீவுப் பட்டினசபைத்தலைவர் திரு.அ. சந்தியாப்பிள்ளை மீண்டும் முல்லைத்தீவுப் பட்டின சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரதுபெயரை திரு. எம்.எஸ். பஸ்தியாம்பிள்ளை பிரேரிக்க திரு. ஏ. வி. அந்தோனிப்பிள்ளை அனுவதித்தார்.

---

## மன்னுரில் 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு

மன்னுர், வியாழன்

மன்னுர் சுகாதாரக் குழுவினரின் ஏற்பாட்டின்படி கடந்த சில தினங்களாக மன்னுர் அரசினர் வைத்திய சாலையில் நடமாடும் 'எக்ஸ்ரே' படப்பிடிப்பு நடைபெற்றது. அநேக ஆசிரியர்களும், பொதுமக்களும் இலவசமாக 'எக்ஸ்ரே' படம் பிடித்துக்கொண்டனர். அநேக கிராமங்களைக் கொண்ட மன்னுர் மாவட்டத்தில் நிரந்தரமாக ''எக்ஸ்ரேபடப் பிடிப்பு நிலையம்'' இல்லாதது ஒரு குறையாக இருந்து வருகிறது.

---

## கர்ப்பிணிகள் கஷ்டம்

கிளிநொச்சி, புதன்

முரசுமோட்டைப் பகுதிக்கு மருத்துவத் தாதி இல்லாததால் இங்குள்ள கர்ப்பிணிகள் ஐந்து மைல் தொலைவிலுள்ள கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டியிருப்பதாகத் தெரிகிறது.

---

## ஜெனரல் நீ வினுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவுடனும், ராஜாங்க மந்திரி ஜே. ஆர். ஜயவர்த்தனுவுடனும் கைகுலுக்கிக் கொண்டார். திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவுடன் ஜெனரல் நீவின் கைகுலுக்கியபொழுது சில செகண்டுகள் அவருடன் அளவளாவினுர்.

### சிவப்பு நிற கம்பளம்

இதன் பின்னர் ஜெனரல் நீவின் அங்கிருந்த மந்திரிகளுக்கும், வெளிநாட்டு ராஜியத் தூதுவர்களுக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் அறிமுகம்செய்து வைக்கப்பட்டார். அமைச்சர்கள் பலரும் வந்திருந்தனர். அறிமுகம்செய்து வைக்கப்பட்டதும் ஜெனரல் நீவின் சிவப்புநிற கம்பளத்தின் மீதாக மேஜர் உடுகமவினுல் விசேஷ மேடைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் இராணுவத்தினரின் முழுமரியாதையை ஏற்றுக்கொண்டார் பின்னர் அவர் கண்டிய நடனக்காரர்கள் ஒருபுறம் நர்த்தனம்புரிய, மறுபக்கத்தில் இலங்கை பர்மா தேசியகீதங்கள் ஒலித்துக்கொண்டிருக்க ஜனசமுத்திரத்தின் ''ஜெயவேவா'' வுக்கிடையே திறந்த காரில் ஏறிக்கொண்டு ஊர்வலமாக இராணி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்,

### வழிநெடுகிலும் மக்கள் கூட்டம்

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து இராணி மாளிகைக்கு ஜெனரல் நீவின் அழைத்துச்செல்லப்பட்டபொழுது காலி வீதியின் இருமருங்கிலும் மக்கள் குழுமிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஜெனரல் நீவின் தமது கைகளை அசைத்தும் கரம்கூப்பியும் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

### பிரதமர் சந்தித்தார்

இன்று பிற்பகல் சுமார் 4-30க்கு பிரதமர் திரு. டட்லிசேனநாயக்கா, ஜெனரல் நீவினை இராணிமாளிகையில் சந்தித்து சில நிமிட நேரம் நேசசூழ்நிலையில் பேச்சுக்கள் நடத்தினுர்.

### இராணிமாளிகையில் இரவு விருந்து

ஜெனரல் நீவினையும் அவரது கோஷ்டியினரையும் கௌரவிக்குமுகமாக கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவாவும் அவரது பாரியாரும் இன்று 8 மணிக்கு அவர்களுக்குவிருந்தளித்தனர்.

நாளைவெள்ளிக்கிழமைகாலை செனட்கட்டடத்திலுள்ள இலங்கைப்பிரதமர் காரியாலயத்தில் பிரதமர் திரு. டட்லிசேனநாயக்காவும் ஜெனரல் நீவினும் பேச்சுக்கள் நடத்துவார்கள், இரு தலைவர்களும் இரண்டு தடவைகள் சந்தித்து இருநாடுகளின் உறவுகள் குறித்தும் சர்வதேசஅமைதி பற்றியும் பேச்சுக்கள் நடத்துவார்கள் என்றும் ஜெனரல் நீவின் தாயகம் புறப்படுவதற்கு முன்னதாக கூட்டறிக்கையொன்று வெளியிடப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் நீவினுடன் வந்த பர்மிய வெளிவிவகார மந்திரி யுதைஹானுடன் ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு நாளை பேச்சுக்கள் நடத்துவா[illegible]

நீவின்கோஷ்டியினர்நாளை வெள்ளிக்கிழமை களனி ராஜமகா விகாரைக்கு விஜயம் செய்வர். கண்டி தலதாமாளிகை, பேராதனைப்பூந்தோட்டம், தலவாக்கொல்லை, அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் இவர்கள் விஜயஞ் செய்வார்கள். ஜெனரல் நீவினின் விஜயம் [illegible] உள்ள இலங்கை ஸ்தானிகர்

---

## "நட்பின் மூலம் பாகிஸ்தானை நல்வழிக்கு திருப்புவோம்"

### காங்கிரஸ் விஷயாலோசனை கூட்டத்தில் மொரார்ஜி

ஜெய்ப்பூர், பெப். 10

இன்று காலை நடைபெற்ற காங்கிரஸ் விஷயாலோசனை கமிட்டிக் கூட்டத்தில், டாஷ்கண்ட் பிரகடனத்தை ஆமோதிக்கக் கோரும் தீர்மான வாசகம் விவாதிக்கப்பட்டது.

தீர்மானத்தைப் பிரேரித்த மொரார்ஜிதேசாய் பேசுகையில், இந்தியா தனது பிராந்திய உரிமைகளைப் பாதுகாக்கும் உறுதியை டாஷ்கண்ட் பிரகடனம் எந்தவிதத்திலும் தளர்த்தவில்லை என்று கூறினுர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான நட்பு வளர இப்பிரகடனம் நிச்சயம் வழிவகுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

''இரு நாடுகளுக்கிடையேயுமான சகல பிரச்னைகளையும் இப்பிரகடனம் தீர்த்து வைக்கும் என்று கூறப்படவில்லை. ஆனுல் பிரச்னைகளை இதன்மூலம் தீர்க்கலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது'' என்றும் திரு மொரார்ஜி சொன்னுர்.

காஷ்மீர் பிரச்னைபற்றி அவர் குறிப்பிடுகையில், காஷ்மீர் இந்தியாவின் இணைபிரியாத பகுதி என்றும் இதனைக் கருத்திற்கொண்டு டாஷ்கண்ட் பிரகடனத்தை நோக்கக்கூடாதென்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தானை நல்ல வழிக்குத் திருப்ப அவகாசம் அளிப்போம். இதனை நட்பு வழியில்தான் நாம் செய்ய முடியும்'' என்றும் அவர் கூறினுர்.

---

## சேவைநலம் பாராட்டு

திருநெல்வேலி, வியாழன்

திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றி வவனியா பேயாடி கூளாங்குளம் ஸ்ரீமுருகன் வித்தியாசாலைக்கு மாறிச் சென்ற ஆசிரியர் திரு. நா. செல்வநாயகத்தின் சேவைநலம் பாராட்டு விழா பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர்கள் திரு. க. தி. சம்பந்தன், திரு. க. வேலுப்பிள்ளை ஆகியோர் அன்னுரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினுர்கள். ஈற்றில் ஆசிரியர்களின் விருந்துபசாரத்துடனும் அன்பளிப்பு வழங்குதலுடனும் வைபவம் நிறைவேறியது.

---

## பிரயாணிகள் கஷ்டம்

மாங்குளம், புதன்

துணுக்காய், மல்லாவி, வவனிக்குளம் குடியேற்ற இடங்களில் இருந்து வரும் பிரயாணிகள் பெரும்பாலும் மாங்குளத்தில் தங்கியே யாழ்ப்பாணம், வவனியா, மன்னுர், முல்லைத்திவு ஆகிய பிரதான நகரங்களுக்குப் போகவேண்டியிருப்பதாக அறியப்படுகிறது. ஆனுல் மாங்குளத்தில் பிரயாணிகளின் வசதிக்காக தங்குமிடமொன்று இல்லாததால் பிரயாணிகள் மிக்க கஷ்டமடைவதாகத் தெரிகிறது. இரவில் வரும் பிரயாணிகள் மேலும் கஷ்டமடைவதாக அறியப்படுகிறது.

---

திரு. வி. சி. ஜயசூரியா இலங்கை வந்துள்ளார். இக்கோஷ்டிக்குரிய சகல ஏற்பாடுகளுக்கும் பொறுப்பாக போக்குவரத்து மந்திரி திரு திரு. ஈ. எல். பி. ஹருலை கடமையாற்றுவார்.

---

## சந்தேக ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]க்கு செய்யப்பட்டவர்களிடமிருந்து இரகசியப்பொலிசார் அவர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்து வருவதாகவும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மந்திரிகளுக்கும் முக்கியஅதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஆயுதம் தாங்கிய பொலிசார சில வீடுகளை காவல் புரிந்து வருகின்றனர்.

இதேசமயத்தில் வெடிகுண்டுகளைத் தயாரிக்கும் இடங்கள்மீது தீவிர கண்காணிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு தொழில் மந்திரி திரு. முசமட் கடுமையான நடவடிக்கை எடுக்கவிருக்கின்றனர்.

வனத்தமுல்லை பகுதியிலுள்ள பல இடங்களில் வெடிகுண்டுகள் இருப்பதாக சந்தேகித்த பொலிஸார் திடீர் சோதனைகள் நடத்தி வருகின்றனர்.

---

## 40 ஆசிரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து கல்வி மந்திரியிடம் முறையிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வெளிமாகாணங்களில் நீண்டகாலமாகக்கடமையாற்றிவிட்டு மறுபடியும் வடபிரதேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டவர்களை அங்கிருந்து மாற்றியிருந்தால் அந்த இடமாற்றங்களை இரத்துச் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேபோல தொழிற்சங்க நிர்வாகிகளும், பண்டிதர்களும், பட்டதாரி ஆசிரியர்களும், விவாகமாகாத ஆசிரியைகளும் வடபகுதியிலேயே கடமையாற்றுவதற்கு மேற்படி கமிட்டியின் தீர்மானங்கள் வகைசெய்கின்றன.

---

## கதாப்பிரசங்கம்

இன்று வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை ஸ்ரீமத் சி. எஸ். எஸ். மணிபாகவதர் மகாபாரத கதாப்பிரசங்கத் தொடர்ச்சியை நிகழ்த்துவார். இரவு 7 மணிக்கு சுக்கிரவார உற்சவம் நிகழும். இரவு 8 மணி முதல்திரு. சண்முகரத்தினத்தின் ''மாணிக்கவாசகர்'' என்னும் பொருள் பற்றிய சங்கீத கதாப்பிரசங்க அரங்கேற்றம் நிகழும்.

---

## தீ விபத்தில் எண்மர் காயம்

வியட்னும், பெப். 10

சைகோனில் ஜனநெருக்கடியுள்ள பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட தீ விபத்தில் எட்டுப் பேர் காயமடைந்தனர். 250 வீடுகள் முற்றுக எரிந்து சாம்பலாயின.

---

## ஏப்ரல் மாதத்தில் அறிக்கை

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கை வானெலிக் கமிஷனின் அறிக்கை ஏப்ரல் மாதம் முடியுமுன் மகாதேசாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

ஜனவரி 5-ந் திகதி தொடக்கம் கம்மிஷன் அங்கத்தவர்கள் பொதுமக்கள் கொடுத்த சாட்சியம் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org